# கம்பம் நகராட்சி

**2018—ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாள் (31.01.2018) புதன் கிழமை முற்பகல் 11.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

| | |
|---|---|
| **1.** | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 12/2017—ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | நகராட்சி பொறியாளர் அவர்களின் 12/2017—ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **3.** | இந்நகராட்சி சொந்தமான குடிநீர் விநியோகம் செய்யும் டிராக்டர் டிரைலர் TCU – 9769 —க்கு 7.50 X 16 அளவுள்ள டயர்கள் 4 எண்ணம் மற்றும் உரிய பழுது பார்க்கும் பணிகள் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.52,000/—க்கு (ரூபாய் ஐம்பத்தி இரண்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு— 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) குடிநீர் விநியோக பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.337/2018/இ2) |
| **4.** | இந்நகராட்சி வாரசந்தை வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கட்டமைப்பு நிலைப்பு தன்மை (Structural Stability) குறித்து தொழில் நுட்ப ஆய்வறிக்கை பெரும்பொருட்டு முதல்வர், அழகப்பா செட்டியார் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, காரைக்குடி. அவர்களின் ACCET/CIVIL/ Structural/ Stability Investigation/01/2017 19.09.2017 தேதிய கடிதத்தின் படி வரிசை எண் 4ல் குறிப்பிட்டுள்ளவாறு சமர்பிக்கப்பட்டுள்ள காரைக்குடியிலிருந்து கம்பம் வந்து செல்வதற்கான பயணப்படி/வாகனத்திற்கான கட்டணம் (Taxi Fare) ரூ. 6600—க்கு (ஆறாயிரத்து அறுநூறு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலககுறிப்பு:— 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி வழங்கப்பட்ட தொகை ரூ.**6600**/—ஐ மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.**3090/2017**/இ2) |

**5.** இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 1296, நாள்.17.08.2017–ம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு 112 இடங்களில் புதிய மின் இணைப்பு பெற தேவையான இணைப்பு பணிகள் செய்ய 11.01.2018–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவுக்கும்.

| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி விகிதம் மதிப்பீட்டை விட** | |
|---|---|---|---|---|---|
| | | | | **குறைவு** | **கூடுதல்** |
| 1 | தெருவிளக்கு பராமரிப்புக்கு 112 இடங்களில் புதிய மின் இணைப்பு பணிகள் செய்தல். | 4,88,000/– | எல். ராஜேந்திரன் | 0.12 | - |
| | | | வி.கிருஷ்ணன் | - | 0.23 |

**அலுவலககுறிப்பு:–** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.12 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள எல். இராஜேந்திரன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2048/2017/இ2)

**6.** இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 1374, நாள், 15.12.2017–ம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின்பொருட்கள் வாங்க 11.01.2018–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவுக்கும்.

| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி விகிதம் மதிப்பீட்டை விட** | |
|---|---|---|---|---|---|
| | | | | **குறைவு** | **கூடுதல்** |
| 1 | தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின் பொருட்கள் வாங்குதல். | 4,90,000/– | கே.எம்.பி.எல். எலக்ட்ரிக்கல்ஸ், கம்பம் | 0.07 | - |
| | | | ராஜேந்திரா ஸ்டோர்ஸ், கம்பம் | - | 0.53 |

**அலுவலககுறிப்பு:–** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.07 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள கே.எம்.பி.எல். எலக்ட்ரிக்கல்ஸ், கம்பம் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3352/2017/இ2)

**7.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1385, நாள்.15.12.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 12.01.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | கம்பம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் பொது சுகாதாரம் 2ஆம் பிரிவு அலுவலக அறை மற்றும் தளவாளசாமான்கள் வைப்பறை அமைக்கும் பணி | 75,000/– | M/s ஏ.பி. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் | – | மதிப்பீட்டு விலை |
| | | | ஆர். சபிர்அலி | 0.79 | – |

**அலுவலகக் குறிப்பு** : – 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் திருவாளர்கள் ஏ.பி. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், கம்பம் அவர்கள் வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1155/2017/இ1)

**8.** துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் தேனி அவர்களின் கடித ந.க.எண்.**7507**/அ**2 /2017**, நாள்: **.01.2018–**இன்படி கம்பம் நகர் பகுதிகளில் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் **0–5** வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு **28.01.2018** அன்று இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள **25** மையங்களில் நடைபெறவுள்ளது. அவ்வாறன நிகழ்வுகளுக்கு நகராட்சி பகுதிகளில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்யவும், பேருந்து நிலையத்தில் பந்தல் அமைத்து போலியோ சொட்டு மருந்து கொடுக்கவும் ஆகும் செலவினத் தொகை ரூ.16,000/–ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** போலியோ சொட்டு மருந்து முகாம் சிறப்பாக நடத்தி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் திரு எம்.சக்திவேல், துப்புரவு ஆய்வருக்கு முன்பணமாக வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். **02/2018/**எச்**1)**

**9.** சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.22492/2013/ஜே3, 28.12.2017–ஆம் தேதிய கடிதத்தில், கம்பம் நகராட்சியில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரியும் திரு கு.ஆனந்தன் மற்றும் 6 பணியாளர்கள் பணிவரன்முறை செய்யக்கோரி தொடர்ந்த வழக்கின் WP(MD) No.7151/2013 தீர்ப்பாணை மீது சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட மேல்முறையீடு வழக்கு **(**WA(MD) No.826 of 2017 and CMP (MD) No.5690 of 2017**)** உயர்நீதிமன்றத்தில் மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால், டெல்லி உச்சநீதிமன்றத்தில், மேற்படி தீர்ப்பாணையின் மீது மேல்முறையீடு செய்து மேல்நடவடிக்கை தொடரும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி மேல்முறையீடு செய்வதற்கு Special Leave Petition

<table>
<tr><td></td><td>தாக்கல் செய்து தடையுத்தரவு பெறவும், மேற்படி வழக்கினை திரு ஐ.கணேசன் வழக்கறிஞர் வசம் ஒப்படைத்து நடத்திடவும், அதற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் இதர செலவினத் தொகை ரூ.40,000/– ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கலாம்.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)அவசர அவசியம் கருதி மேற்படி வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ.40,000/–ம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்1111/2013/எச்1)</td></tr>
<tr><td>10.</td><td>இந்நகர்மன்றத் தீர்மான எண்.1378, நாள்.15.12.2017–இன்படி, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 Y 1959 -க்கு மராமத்து பணிகள் செய்து தகுதிச்சான்று பெறுவதற்கு 05.01.2018–ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>விலை விகிதம்<br>ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>திரு பி.முருகன்,<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்,<br>நகராட்சி எதிர்புறம்.<br>கம்பம்.</td><td>89,800/–</td></tr>
<tr><td>2.</td><td>திரு C.K.S.முருகன்,<br>கண்ணப்பன் ஆட்டோ கேரேஜ்,<br>ரேஞ்சர் ஆபிஸ் ரோடு<br>கம்பம்.</td><td>94,800/–</td></tr>
</table></td></tr>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு: வரப்பெற்ற இணைடு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு பி.முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல், என்பவரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.3277/2017/எச்1)</td></tr>
<tr><td>11.</td><td>இந்நகராட்சிக்குச் சொந்தமான டம்பர் பிளேசர் லாரி TN60 T 4504 லாரிக்கு முன்வீல் இடதுபக்கம் ஸ்பிரிங் கட் பிளேட் மற்றும் பின்வீல் இடதுபக்கம் ஜாக்கி பின் பழுதடைந்துவிட்டது. எனவே மேற்படி பழுதினை சரிசெய்ய ஆகும் செலவீனத் தொகை ரூ.2,310/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி பொது சுகாதார பணியின் அவசியம் கருதி மேற்காணும் பழுதினை சரிசெய்தமைக்கு செலவுத் தொகை ரூ.2310/–ஐ திரு பி.குருசாமி, ஒட்டுநருக்கு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3386/2017/எச்1)</td></tr>
<tr><td>12.</td><td>அரசாணை எண்.6 நிதி (படிகள்) துறை நாள்.06.01.2018–ல் அரசு பணியாளர்களுக்கான 2016–2017 ஆம் ஆண்டிற்கு மிகை ஊதியம் சி மற்றும் டி பிரிவு பணியாளர்களுக்கு ரூ.3000/– வழங்குவதற்கு அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு: பதிவு செய்யலாம். (ந.க.எண்.109/2018/சி1)</td></tr>
</table>

**13.** தூய்மை இந்தியா திட்டம், சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு மேம்பாட்டு பணிகள் செய்திட அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**336.00** இலட்சத்தில் IEC Activities ரூ.**5.38** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் நாளது தேதி வரை ரூ.**1.50** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது போக மீதம் **3.88** இலட்சம் இருப்பில் உள்ளது. எனவே இந்நகராட்சி பகுதிகளில் உள்ள சமுதாயக்கழிப்பிடங்கள், பொதுக்கழிப்பிடங்களில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அடையாள எண் உள்ளடக்கிய விளம்பர பலகை பொறுத்துவதற்கு மேற்படி தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண். 139/2017/எச்1)**

**14.** இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 60 Y 1959-க்கு டயர் பழுதடைந்துவிட்டது. எனவே MRF 7x50/16 சைஸ் ஆறு புதிய டயர்களில் பட்டன் டயர் நான்கும், ரன்னிங் டயர் இரண்டும், ஆறு புதிய டியூப் மற்றும் ஆறு பிளாப்களை புதியது வாங்கி வண்டியில் மாட்டி பொருத்துவதற்கு **23**.01.2018–ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பேட்டரி ஒன்றுக்கு விலை(வரிகள் உள்பட) ரூ. |
|---|---|---|
| 1. | பிரகாஷ் டயர்ஸ்,<br>5.1.203, K.T.R.Complex,<br>Madurai Road, Aundipatti – 625 512. | 15.000/-<br>(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) |
| 1 | பெரியார் பேட்டரி சென்டர்,<br>444–A2,குமுளி ரோடு,<br>குலாளர் மண்டபம் எதிரில், கம்பம். | 16,000/-<br>(ரூபாய் பதினராயிரம் மட்டும்) |

**அலுவலகக் குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள உரிமையாளர் பிரகாஷ் டயர்ஸ், ஆண்டிபட்டியின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.3278/2017/எச்1)**

**15.** இந்நகராட்சிக்குச் சொந்தமான டம்பர் பிளேசர் வாகனம் TN 60 T **4504–**இல் பேட்டரி பழுதடைந்துவிட்டது. எனவே MRF 7x50/16 சைஸ் ஆறு புதிய டயர்களில் பட்டன் டயர் நான்கும், ரன்னிங் டயர் இரண்டும், ஆறு புதிய டியூப் மற்றும் ஆறு பிளாப்களை புதியது வாங்கி வண்டியில் மாட்டி பொருத்துவதற்கு **23**.01.2018–ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பேட்டரி ஒன்றுக்கு விலை(வரிகள் உள்பட) ரூ. |
|---|---|---|
| 1. | பிரகாஷ் டயர்ஸ்,<br>5.1.203, K.T.R.Complex,<br>Madurai Road, Aundipatti – 625 512. | 15.000/-<br>(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) |
| 1 | பெரியார் பேட்டரி சென்டர்,<br>444–A2,குமுளி ரோடு,<br>குலாளர் மண்டபம் எதிரில், கம்பம். | 16,000/-<br>(ரூபாய் பதினாராயிரம் மட்டும்) |

**அலுவலகக் குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள உரிமையாளர் பிரகாஷ் டயர்ஸ், ஆண்டிபட்டியின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.3179/2017/எச்1)**

**ஒப்பம்/– திரு ந.சங்கரன்,**
ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,
கம்பம் நகராட்சி.

நாள்.**31.01.2018**
இடம். கம்பம்